**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 147 /2024**

**Deposition of P.W.** 1

Name : விஷ்னு

S/o, D/o, W/o : மோகனகுமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 22.10.2025**

Accused absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் நெய்யாற்றின்கரையில் வசித்து வருகிறேன். கேரளா அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியாற்றி வருகிறேன். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு 10.00 மணிக்கு நான் அரசு பேரூந்தில் நடத்துனராக பணிபுரிந்த போது ஓட்டுனராக சிபு என்பெவர் பணி புரிந்தார். காட்டாத்துறை சந்திப்பில் வைத்து பேரூந்து கண்ணாடியில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு பேர் கல்லால் எறிந்து விட்டார்கள். அவர்கள் எதிரிகள் சுஜினும், கிறிஸ்டோபர் என்ற சுபின் ராஜ் தான். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (இன்றைய தினம் எதிரிகள் இருவரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை) சம்பவம் குறித்து நான் தான் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த பகுதி இருட்டான பகுதி என்றால் சரிதான். சம்பவ நாளிலேயே புகார் கொடுத்து விட்டேன். சம்பவ நாளன்று விசாரித்த பிறகு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 10.03.2016ம் தேதி சம்பவம் நடந்தது. 11.03.2016ம் தேதி எதிரியை கைது செய்து என்னை விசாரித்தார்கள். அப்போது எதிரிகள் தான் பேரூந்தை உடைத்ததாக காட்டி கொடுத்தார்கள் என்றால் சரிதான். புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் எதிரிகளின் அடையாளம் குறித்து கூறவில்லை என்று சொன்னால் வாகனம் குறித்து தான் சொன்னேன் எதிரிகளின் அடையாளம் கூறவில்லை. வாசனத்தின் அடையாளம் கூறியிருந்தால் எதிரிகள் குறித்தும் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பார்த்திருந்தால் அடையாளம் கூறியிருப்பேன் எதிரிகளை பார்க்காததால் போலீசாரிடம் அடையாளம் கூறவில்லை என்றால் சரிதான். 10.03.2016ம் தேதி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பேரூந்தை பார்த்து புகார் எழுதி அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் தெரியாததால் புகாரை போலீசார் எழுதினார்கள் என்றால் சரியல்ல வேறு ஒரு நபர் எழுதினார். வேறு ஒரு நபர் என்ன எழுதினார் என்று எனக்குத் தெரியாது என்றால் நான் சொன்னதை எழுதினார். அ.சா.1 புகாரில் வேறு ஒரு நபர் எழுதியதாகவோ, அவரின் கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். நான் மலையாளத்தில் சொல்ல சொல்ல தமிழில் எழுதப்பட்டதாகவும் குறிப்பிடப்படவில்லை. 10.03.2016ம் தேதிக்கு பிறகு நான் வேறு புகார் கொடுக்கவில்லை. சம்பவ நாளில் கொடுத்த புகார் மறைக்கப்பட்டு பின்னர் வழக்கிற்கு தகுந்தார் போல சாட்சிகள் குறித்தும்,

எதிரிகள் குறித்தும் புதிதாக புதிய புகார் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து காரணமாக கண்ணாடி உடைந்து விட்டதாக அறிக்கை பெற்றேன் என்றால் சரிதான். கல்லால் கண்ணாடி உடைக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. விபத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.